# திருமந்திரம் காட்டும் பக்திநெறியும் இசையியலும்

**ஸ்ரீநாகபூசணி அரங்கராஜ்**[1]

## ஆய்வுச்சுருக்கம்:

*ஆதியும் அந்தமுமில்லாத பராபரனான, சிவனை மூலநாதமாகக் கொண்டு விளங்குபவை, பன்னிரு திருமுறைகளாகும். இவற்றில் பத்தாம் திருமுறையாகக் கொள்ளப்படும் திருமந்திரம், தமிழ் மூவாயிரம் என்று போற்றப்படுகிறது. திருமூலரால் இயற்றப்பட்ட இந்நூல் ஒன்பது ஆகமங்களின் சாரமாக ஒன்பது தந்திரங்களைக் கொண்டமைந்துள்ளது. திருமூலர், திருமந்திரத்தில் பெரும் தெய்வமாக சிவனை ஏற்றுக் கொண்டுள்ளார். உடலில் உயிர் பொருந்தி உடலை இயக்குதல் போல உலகை இயக்குபவன் சிவன். ஆதலால், சிவனே உலகிற்கு உயிரும், மூலாதாரமும் ஆவார். உலகங்கள் பலவற்றையும் உடலாக உடையவர் அவர். அவரே அனைத்து உலகங்களுக்கும் ஒரே தெய்வமாக விளங்குபவர். பஞ்சபூதத்தினாலாகிய இவ்வுலகில் ஐந்தொழிலைப் புரியும், உலகமாதாவாகிய சிவசக்தியின் புதல்வர்கள் பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என ஐவராவர். உயிர்கள் அவை செய்த வினைகளுக்குப் பரிசாக இப் பிறப்புத் தொடர்கின்றது. இதை அறிந்தும் மனிதர்கள் உலக வாழ்வியலில் ஆசை வைத்துத் துன்புறுகின்றனர் என்பதைத் திருமந்திரம் விளக்குகிறது. தியானத்தின் மூலம் முப்பத்தெட்டுக் கலைகளிலும் ஆன்மா குண்டலினி சக்தியை எழுப்பி நிறுத்தும் அனுபவத்தைக் கூறும்போதும், ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் இசை கேட்கப்படுவதை அனுபூதிமான்கள் கூறியிருக்கிறார்கள். எளிமையும் இனிமையுமுடைய திருமந்திரப் பாடல்கள், மனிதப்பிறவி-யெடுத்தலின் பின், சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய நால்வகை வழிகளின் மூலம் பக்திநெறி கொண்டு, முக்திக்கு வழிகாட்டுவதாய் அமைகின்றன. பக்திநெறி மூலமாக, நம்வாழ்வியல் முறைமைகளின் மூலம், ஐம்புலன் அடக்கம் கொண்டு விபரணமாக ஆய்வதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைகிறது. இந்த ஆய்வின் மூலங்களாக பன்னிரு திருமுறை, பன்னிரு திருமுறை வரலாறு, திருமந்திரம் என்பவை நோக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் எல்லையாக, திருமந்திரப்பாடல்களில் வாழ்வியல் பக்திநெறி சார்ந்த பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறையில் திருமந்திரப்பாடல்கள் இயல் வடிவில் இருந்தாலும்,இந்த ஆய்வினூடாக, இசையியல் அடிப்படையில் குறித்த சில திருமந்திரப் பாடல்களுக்கு இராக அமைப்பிட்டு ஆற்றுகையினூடாக செயல்முறை ஆய்வாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மனித உயிரின் சிறப்பின் மகிமை அறியப்படாத இவ் வாழ்வில், பக்திநெறி மூலமாக மனித உடலைப் பேணலும், உயிரைப் பேணி நடைமுறைப்படுத்தலும் இந்த ஆய்வினூடாகப் பெறப்படும் முடிவுகளாக அமைகின்றன.*

**திறவுச்சொற்கள்:** திருமந்திரம், சிவன், உயிர், உலகு, திருமூலர், பக்திநெறி.

[1] *இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
yallnakam@gmail.com

## அறிமுகம்

பக்திநெறியைத் தமிழ் உலகிற்கு வழங்கிய சித்தர் பரம்பரையில் முதன்மையும் தொன்மையும் வாய்ந்தவர் திருமூலர், ‘‘சித்தாந்தத்தின் தந்தை’’ எனப் போற்றத்தக்கவர். முதன்முதலில் சித்தாந்தம் என்ற சொல்லைத் தமது திருமந்திரத்தில் எடுத்தாண்டவரும் இவரே. இவரால் பாடப்பட்ட மூவாயிரம் (3000) பாடல்கள் அடங்கிய திருமந்திரப் பாடல்கள் பத்தாம் திருமுறையாகத் திகழ்கின்றன. பக்தி வழிபாட்டினை மனவழிபாட்டினை திருமந்திரத்தில் 59 பாடல்களில் உடலை அல்லது கோயிலாகக் குறித்து பாடியுள்ளார். சைவசமயம் குறிப்பிடும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறிகளையும் சுட்டும் திருமூலர் இறைவழிபாட்டில் புறவழிபாட்டு நெறிகளைவிட மனவழிபாடான பக்தி வழிபாட்டு நெறிகளையே மேன்மையுடையதாக வலியுறுத்துகின்றார்.

சிவபெருமான் ஆன்மாக்கள் தோறும் விரும்பி எழுந்தருளியிருக்கும் இடம் உள்ளமாகிய மனமண்டலமாகும். அவ்வுள்ளமே சிவன் உறையும் கருவறையாகும். மனத்தையே கோயிலாகக் கொண்டு இறைவனுக்குக் காலையிலும் மாலையிலும் பாடும் பாட்டே நிவேதனப் பொருட்களாகும் (திருமந்திரம்: 1824). மனத்துள்ளே விளங்கும் இறைவனை வழிபடவும் இசைப்பாக்களைப் பாடவும் நினைக்கவும் புறத்தேயுள்ள இறைவனை வழிபட நீரும் மலரும் இன்றியமையாதன. அதுபோல அகத்தேயுள்ள பெருமானை வழிபடக் கண்களையே மலராகவும் அதிலே கசிந்துவரும் கண்ணீரையே நீராகவும் கொண்டு அபிடேகம் செய்து வழிபடுவதே சிறந்த வழிபாடு எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

‘‘நினைவதும் வாய்மை மொழிவதும் அல்லால்
கனைகழல் ஈசனைக் காண அரிதாம்
கனைகழல் ஈசனைக் காண்குற வல்லார்
புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே’’ (திருமந்திரம்: 1826)

என்ற பாடல் காட்டுகின்றது. இவ்வாறு உணர்ந்து மலரையும், நீரையும் சிவனுக்கு வழங்குபவர்களே புண்ணியம் செய்தவர்கள். இவ்வுண்மையை அறியாது உலகத்தார் கெடுகின்றனரே (திருமந்திரம், 1828). திருமூலர், திருக்கோயிலில் சிவபூசைகள் செய்தல் நூறுமடங்கு உயர்ந்தது. ஆனால் தவம் செய்வாரின் உடலில் (உள்ளத்தில்) செய்யப்படும் சிவபூசை ஆயிரம் மடங்கு உயர்ந்ததாகும் (திருமந்திரம்: 1851) எனப் புறவழிபாட்டைவிட அகவழிபாடே சிறந்தது என்று விளக்குகிறார்.

## அன்பு நெறி

சீரான வாழ்விற்கு அன்பே பிரதானமாகும். அன்பிலா வாழ்க்கையைத் திருவள்ளுவர் “வன்பாற்கண் வற்றல்மரம் தளிர்த்தற்று” என்று கூறுகின்றார். திருமூலரும் இதையே “அன்பும்

சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்" (திருமந்திரம்: 257) என்று பாடி அன்பு நெறியே உலகிற்கு உகந்த நெறி என்று விளக்குகின்றார்.

**ஆசை துறத்தல்**

"ஆசையே எல்லாத் துயரங்களுக்கும் மூலமாகும்" என்றார் புத்தர். இதனையே திருமூலர் "ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்" (திருமந்திரம், 270) என்று கூறிப் பற்றற்ற தன்மையைப் பாடுகின்றார்.

**ஈகை**

தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் ஈகைக் குணத்தைச் சிறப்பிக்கின்றன. ஈகை வாழ்வியல் அறங்களுள் மிகச்சிறந்ததாகும். திருவள்ளுவரும், இளங்கோவடிகளும், கம்பரும் ஈகையைப் போற்றிப் பாடியுள்ளனர். திருமூலரும் "தான் உண்ணும் உணவில் ஒரு கைப்பிடி உணவினைப் பிறருக்குக் கொடுப்பது எல்லோருக்கும் ஏற்ற எளிய செயல்" என்று கூறுகின்றார்.

திருமூலர் யோகநெறி நின்று ஆன்மாவினுள்ளே இறைவனைக் கண்டு அனுபவித்தார். சிவானந்தக்கூத்து என்ற தலைப்பில் ஓர் அழகிய பாடலில் இசை அரங்கு, வாத்திய அரங்கு, பல்லிசைக்கருவி அரங்காகிய உலகத்தை இயக்கும் தன்மைக்குரிய சிறப்புக்களுடையவன் நடராஜப்பெருமான் என்று கூறுகிறார்.

''ஆனந்தம் ஆடரங்கானந்தம் பாடல்கள்
ஆனந்தம்பல்லியம் ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தமாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்து கந்தானுக்கே'' (திருமந்திரம்: 2725)

இனி அட்டாங்க யோகப்பேறு எனும் தலைப்பில் யோகத்தில் ஆதனம் எனும் நிலையில் வல்லவர்களை விண்ணோர் வரவேற்கும்போது ''தருந்தண்முழவும் குழலும் இயம்ப'' (திருமந்திரம்: 634) எனக்கூறி இசைக்கு முழவும் குழலும் எவ்வளவு இன்றியமையாதவை என்பதைச் சுட்டுகின்றார்.

தியானத்தின் மூலம் 38 கலைகளிலும் ஆன்மா, குண்டலினி சக்தியை எழுப்பி நிறுத்தும் அனுபவத்தைக் கூறும்போது ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு ஓசை கேட்கப்படுவதை அனுபூதிமான்கள் கூறியிருக்கிறார்கள். இதனைத் திருமூலரும் வழிமொழிந்துள்ளார்.

உயிர்கள் யாவும் படைப்பிலும் ஒன்றானவை. ஏற்றத்தாழ்வு இல்லை. படைத்தவனும் பலரில்லை எனும் உயர்ந்த கோட்பாட்டினை திருமூலர் எடுத்துரைக்கிறார்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே" (திருமந்திரம்: 2104)

என்ற பாடல் மூலமும், பசித்தோருக்கு உணவளித்தல், இன்னுரை புரிதல் என்பவற்றை

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொருவாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே" (திருமந்திரம்: 252)

எனும் பாடலின் மூலமும் உரைக்கின்றார். நமது வாயால் இறைவனின் புகழைப் பாடுதலும் ஏழை, எளியவர்களுக்கு உணவு கொடுத்தலும், பிறருடன் இன்னுரை செய்தலும் இறைவனிடம் சேர்க்கும் எனும் வழிபாட்டு முறையைக் கூறுகின்றார்.

"பெருக்கப் பிதற்றில் என்பேய்த்தேர் நினைந்து என்
விரித்த பொருட்கெல்லாம் வித்தாவது உள்ளம்
பெருக்கில் பெருக்கும் சுருக்கில் சுருக்கும்
அருத்தமும் அத்தனை ஆய்ந்து கொள்வார்க்கே" (திருமந்திரம்: 2036)

பற்றை விட்டால் பரமனருள் கிடைக்கும். வாழ்வை நிலையானதென எண்ணி, காணும் பொருள் மீது நாட்டம் கொண்டு அதனை அடைய அல்லும் பகலும் போராடி இன்பத்தினைத் தொலைப்பதற்கு விளைநிலமாக விளங்குவது மனமாகும். ஆசை பெருகப் பெருக உலகமும், அதன் மீது வைக்கும் பற்றும் மிகுதியாகப் பெருகும். ஆசைகளைக் குறைத்துக்கொண்டால் உலகமே சுருங்கும் என்பார்கள்.

இறைவனிடம் உயிர்கள் கொள்ளும் அன்பையே அன்புடைமை என்று கூறுகின்றார் திருமூலர். அன்பே சிவம் எனும் உண்மையை யாரும் உணரவில்லை. இதனை உணராதவர்கள் அறிவற்றவர்கள். அன்பே சிவம் எனும் உண்மையினை இறைவனுடைய அருளால் அனைவரும் அறிந்தபின் பேரின்பம் பெற்று அமர்ந்திருப்பர்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே'' (திருமந்திரம்: 270)

எலும்பை விறகாக்கி, தசைகளை அறுத்து, நெருப்பில் இட்டுப் பொன்போல் பொரியும் படியாக வறுத்தாலும் பயன் இல்லை. அன்போடு உருகி, இறைவனை வேண்டாதவர் கடவுளை அடைய முடியாது என்பதை,

''என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரியவறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கன்றி
என் போல் மணியினை எய்த வொண்ணாதே'' (திருமந்திரம்: 272)

என்ற பாடலின் மூலம் திருமூலர் பக்திநெறியில் வாழ்வியற் சிந்தனைகளைச் சிறப்பாக அமைத்துள்ளார்.

அடுத்து கடவுளே நெறியையும் நெருஞ்சில் முள்ளையும் படைத்தான். நெறி தவறி நடந்தால் காலில் முள் குத்தும். நெறி தவறாமல் நடந்தால் அந்த முள் ஒன்றும் இடர் செய்யாது எனும் வாழ்வியல் உண்மையை மிக அழகாகத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

கடவுளிடம் அன்பு கொள்வது மட்டும் அன்பு ஆகாது. மக்களுக்குச் செய்யும் தொண்டின் மூலமும் கடவுளிடம் அன்பினைப் பெறமுடியும் என்பதனை,

''படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடும் கோயில் நம்பர்க் கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்கதுவாமே'' (திருமந்திரம்: 1857)

எனும் பாடல் மூலம் பலமாடங்களை உடைய கோயில்களில் வாழும் இறைவனுக்கு செய்வதை விட நடமாடும் கோயில்களாக உள்ள தொண்டனுக்குச் செய்வதே சிறப்பு என்கிறார் திருமூலர். மனிதனின் உடம்பை இறைவன் குடியிருக்கும் ஆலயமாக மிகவும் அழகாக உருவகப்படுத்துகிறார்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே'' (திருமந்திரம்: 1823)

## திருமந்திரம் சுட்டும் வாழ்வியல் முறைகள்

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது கல்வியாகும். நல்வழிக்கும் முன்னேற்றத்துக்கும் இட்டுச் செல்வது கல்வியாகும்.

"துணையதுவாய் வரும் தூயநற்சோதி
துணையது வாய்வரும் தூயநற் சொல்லாம்
துணையதுவாய் வரும் தூயநற் கந்தம்
துணையதுவாய் வரும் தூய நற்கல்வியே" (திருமந்திரம்: 294)

எனும் பாடல் மூலம் உள்ளத்தில் ஒளி உண்டாகில் வார்த்தைகள் தெளிவாகும். மனத்தூய்மை ஏற்படும். இவற்றிற்கெல்லாம் அடிப்படை கல்வியே என்ற உண்மையைத் திருமூலரின் பாடலின் மூலம் உணரலாம்.

**ஐம்புலன் அடக்கம் மூலம் பக்திநெறி**

மனிதன் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளையும் அடக்கினால் எத்தகைய ஆற்றல் அடையமுடியும் என்பதை,

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே" (திருமந்திரம்: 2883)

பசு என்ற உருவகத்தின் மூலம் ஐம்பொறிகள் அலைவதையும் மேய்ப்பவர் இல்லாமல் வெறிபிடித்துத் திரியும் மாடுகளுக்கு மேய்ப்பவர் மூலம் அம்மாடுகள் அடங்கி நல்நிலைப் படுத்திச் செயற்பட்டால் அப்பசுக்கள் ஞானப்பால் சொரியும். அதுபோல் மனிதனின் ஐம்பொறிகளும் அலைகின்றன. அவற்றை அடக்கிச் செயற்படுத்துவதே மனித மனத்திற்குச் சிறந்ததாகும்.

செல்வச்செழிப்பில் உள்ளோர் வறுமையில் வாடுவோர் எவராக இருந்தாலும் சிவனை வில்வம் போன்ற பச்சிலையிட்டு வழிபடமுடியும். தாம் உண்ணும் போது தம் உணவில் ஒரேயொரு கைப்பிடி உணவை மகிழ்ச்சியோடு பிறர்க்குக் கொடுப்பது எல்லோராலும் முடியும். இதற்கு வளமை தேவையில்லை. வளமை உடையோர், வறுமை உடையோர் எல்லோராலும் இதனைச் செய்யமுடியும். அதுபோல எல்லோர் இடத்திலும் இனிமையாகப் பேசுவதும் எல்லோராலும் முடியும். இவையே அறஞ்செய்வான் இயல்பு என்று திருமூலர் கூறுகின்றார். எனவே எல்லோரும் இவற்றைத் தம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

தொழில் அடிப்படையில் மக்களிடம் பல குலங்கள் இருந்தாலும் மனிதர்களுக்குக் குலம் ஒன்றே. வழிபடும் கடவுளை அடிப்படையாகக் கொண்டும் குலங்கள் ஏற்பட்டாலும் கடவுள் ஒருவரே. இதனை நன்றே நினைத்துத் தொழுபவர்க்குப் பிறப்பு, இறப்பு எனும் துன்பங்கள் இல்லை. நாளும் அழிந்தொழியும் நிலைகட்குச் சென்று மீளும் நிலையில்லை.

எனவே ஒவ்வொருவரும் தம் உள்ளத்தில் சிவபெருமானின் திருவடி நின்று நிலைபெற நினைக்கவேண்டும். இதுவே உயிருக்கு உறுதி பயக்கும் என்கிறார் திருமூலர்.

திருமூலராகிய சிவயோகியார் திருக்கயிலையில் நந்தியெம்பெருமான் பால் ஞானநூற் பொருள்களை ஓதியுணர்ந்த நான்மறையோகிகளுள் ஒருவர் என்பதை

''நந்தியருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோகமாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்
என்றிவர் என்னோடுடெண் மருமாமே'' (திருமந்திரம்: 67)

திருமூலர் இப்புவிமேல் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தமர்ந்திருந்து தமிழ் மூவாயிரம் ஆகிய திருமந்திர மாலையைப் பாடியருளினார் எனச் சேக்கிழாரடிகள் கூறுதலால் திருமூலர் திருவாவடுதுறையில் சிவபோதியின் கீழ்ச் சிவயோகத்தமர்ந்த காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன் பன்னூற்றாண்டுகளாகும் எனப் பொருந்தும் திருமந்திர இரண்டாம் தந்திரத்தில் இறைவன் புரியும் ஐந்தொழில்களும், உயிர்கள் நுகர்வதற்குரிய நுகர்பொருளும், உடம்பும், உயிர் பற்றியும், சகலவர்க்கத்தினராகிய மக்கட் குலத்தார் இவ்வுலகில் நன்னெறியறிந்து ஒழுகிப் பிறவா நெறியைவிட பேரின்பத்தை அடைதற்குரியராதலின் நம்மால் வேண்டும் பொருளளித்து வழிபட்டு நற்பொருளைக் கேட்டுணர்தற்குரிய மெய்யுணர்வுடைய பெரியோர்களையறிந்து வழிபட்டும் மனமாசகற்றும் தீர்த்தத்தின் இயல்பு தெரிந்தும் தம்மைத் தூய்மை செய்து கொள்ளுதல் வேண்டும் என்பதும் மன்னுயிர்கள் உய்தற்பொருட்டு இறைவன் அன்பர்களுக்கு அருள்புரியும் திறமும் சிவநிந்தை, குருநிந்தை, மகேசுவர நிந்தை ஆகிய தீமைகளினின்றும் நீங்கிக் குற்றமகற்றி நன்னெறியில் ஒழுகி உய்தி பெறுதல் வேண்டும் எனும் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன.

நான்காம் தந்திரத்தில் மந்திரங்கள், வழிபாட்டுமுறைகள், அதிதெய்வ வலிமை, பயன் முதலியன கூறப்பட்டுள்ளன.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதியில்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்துய்மினே'' (திருமந்திரம்: 2104)

உலக மக்கள் அனைவரும் சிறப்பாகச் சிவநெறிச் செல்வர்களும் அன்புடன் கடைப்பிடித்தொழுகும் உய்தி பெறும் நல்லுரைகளும் கூறப்பட்டுள்ளன.

''ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நீளமும்

பாரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
பேரறியாமை விளம்பு கின்றேனே'' (திருமந்திரம்: 95)

உலக மக்கள் நன்நிலையில் சித்தி பெறுதல் வேண்டும் என்னும் பேரருளால் தம் மனத்தில் தோன்றிய இவ்வெண்ணத்தை உணர்த்துகிறார்.

''அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்தறுவரும்
அஞ்சாமுகத்தில் அரும்பொருள் கேட்டதே'' (திருமந்திரம்: 57)

சிவாகமகங்கள் இருபத்தெட்டும் இறைவனுடைய ஈசான முகத்திலிருந்து அருளிச் செய்யப்பட்டது.

''அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரம்
விண்ணவர் ஈசன் விழப்பம் உரைத்தனர்
எண்ணி நின்றப் பொருள் ஏத்துவன் நானே'' (திருமந்திரம்: 58)

காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் எனும் ஒன்பது ஆகமங்களையும் நந்தியெம் பெருமான் இறைவனருளால் கைவரப் பெற்றதைக் கூறுகின்றது. மேற்குறித்த பாடல், கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, மகளிர் இழிவு, அன்புடைமை, கள்ளுண்ணாமை, நடுவுநிலைமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை போன்ற தத்துவங்களை இந்நூல் வலியுறுத்துகின்றது.

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' (திருமந்திரம்: 724)

உடம்பில் இருந்து நீங்கி உயிர்தனித்து நின்று தொழில் புரிதல் இயலாது. ஆகவே உடம்பை நன்முறையில் வளர்த்து உயிரைப் பேணவேண்டும் என்று குறிப்பிடுகின்றார்.

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

திருமூலர் மக்கள் சேவையில் ஈசனைக் கண்டார். எளியோர்க்கு உதவுவது கோயிலொழுகுவதை விட சிறந்த அறம் என்று நம்பினார். எனவே,

"படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே" (திருமந்திரம்: 1821)

என்ற பாடலில் நடமாடும் கோவிலாகிய சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டு படமாடும் கோயிலாகிய இறைவனைப் போய்ச் சேரும் என்று கூறுகின்றார்.

### பிறன்மனை நோக்காமை

பிறன்மனை நோக்காமையைப் "பேராண்மை" என்பார் வள்ளுவப் பெருந்தகை. திருமூலர் இதனை "சொந்த மனைவியானவள் திருத்தி வளர்த்த தேமாங்கனியை ஒத்தவள். பிறன்மனையோ புளியங்காயை ஒத்தவள்" என்று கூறுகின்றார்.

### செல்வம் நிலையாமை

இவ்வுலகில் மனை, பொருள், மாடு போன்றவை நிலையற்ற செல்வம் என்றும் இறைவன் அருள் ஒன்றே நிலையான செல்வம் என்று கூறும் பொழுது

"அருளும் அரசனும் ஆனையுற் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போல" (திருமந்திரம்: 272)

என்கிறார்.

### முடிவுரை

இவ்வாறு திருமூலர் மேற்குறிப்பிட்ட அறங்கள் தவிர நிலையாமை நடுவுநிலைமை, பெரியாரை துணைகோடல், புறங்கூறாமை, பொறையுடமை போன்ற பல்வேறு வாழ்வியல் அறங்களைப் பக்தி நெறியூடாக வலியுறுத்துகின்றார்.

### உசாத்துணை

வெள்ளைவாரணன், க., (1972), பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

அருணாச்சலம், க., (2009), தமிழிசை இலக்கண வரலாறு, கடவு பதிப்பகம், மதுரை.

அருணாச்சலம், க., (2009), தமிழிசை இலக்கிய வரலாறு, கடவு பதிப்பகம், மதுரை.

திருமந்திரம், (1984), காசிமட வெளியீடு, திருப்பனந்தாள், தமிழ்நாடு.

முரளி,ஜீ.ச., (பதி) (2000), பன்னிரு திருமுறை, சதுரா பதிப்பு, சென்னை.

அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள், (1951), திருமந்திரம், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள், தமிழ்நாடு.

இராமநாதபிள்ளை, ப., (1994), திருமந்திரம் மூவாயிரம், தென்னிந்திய நூற்பதிப்புக்கழகம், சென்னை.

திருமந்திரம் முதற்பகுதி, இரண்டாம்பகுதி, (1974), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.